**IOA தலைவரின் கருப்பொருள்**

"வலுவான எலும்புகள்
வலிமை மிகுந்த நாடு!"

**TNOA தலைவரின் கருப்பொருள்**

"தொழில்நுட்பத்தை உள்வாங்குக
இளைஞர்களை உயிர்ப்பூட்டுக!!"

"உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே"

# அறிவியலும் வாழ்வியலும் நம் தாய்மொழியில்

## எலும்பு மருத்துவ சங்கத்தின் முதல் தமிழ் அறிவியல் கருத்தரங்கு

**The First ever Orthopaedic Conference in TAMIL
by
The Tamil Nadu Orthopaedic Association**

ஏற்பாடு :

**தமிழ்நாடு எலும்பு மருத்துவ சங்கம்
&
தஞ்சை எலும்பு மருத்துவ மன்றம்**

நாள் :

**22.10.2023
ஞாயிற்றுக்கிழமை**

நிகழ்விடம் :

**மஹாராஜா மஹால்,
தஞ்சாவூர்.**

எலும்பியல் நண்பர்களுக்கு,

எனது வணக்கங்கள், நமது பெருமைக்குரிய TNOA வரலாற்றில் முதல் முறையாக தமிழில் கருத்தரங்கு நடக்க உள்ளது. இதில் விஞ்ஞானத்திற்கு முதன்மை கொடுத்தாலும், கருத்துப் பரிமாற்றங்கள் நம்முடைய புரிதலுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் தமிழில் நடைபெறும்.

மொழி என்பது புரிந்து கொள்வதற்கான ஊடகம் என்பதைத் தவிர – கூடுதலாக எதுவும் இல்லை.

நமது தாய்மொழியில் புரிதல் சிறப்பாக இருக்கும் என்றும் தெரிந்து இருந்தாலும் நம்மிடையே உள்ள தயக்கத்தைப் போக்க இந்தக் கருத்தரங்கு ஒரு சிறந்த முன்னோடியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கருத்தினை ஏற்று நம்மில் உள்ள உலகச் சிறப்புமிக்க நிபுணர்களும், பேச்சாளர்களும் பேச விழைந்திருப்பது நம்முடைய முயற்சிக்கான அங்கீகாரமாகும். இது நமது தமிழ் ஆர்வலர்கள் மரு.குலாம் ஐயாவும், செயலர் மரு.இரவி அவர்களும் சேர்ந்து தஞ்சையில் ஏற்பாடு செய்வது மிகச்சிறப்பு. தஞ்சை எலும்பு மருத்துவ மன்றத்திற்கும் என் நன்றி!

எனவே நமது அங்கத்தினர்கள் அனைவரும் பெருந்திரளாக வந்து கருத்தரங்கினை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்குமாறு TNOA சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க TNOA

வளர்க தமிழ்

என்றும் உங்கள்
வை.சிங்காரவடிவேலு
தலைவர்
PRESIDENT, TNOA

---

அன்பிற்கினிய TNOA அங்கத்தினர்களுக்கு,

என் பணிவான வணக்கங்கள் – வாழ்த்துகள்!

TNOA வரலாற்றில் முதன் முறையாக நடைபெறவிருக்கும் தமிழ் அறிவியல் கருத்தரங்கம் வெற்றியடைய வாழ்த்துக்கள்,

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

என்ற குறளுக்கேற்ப நம் TNOA தலைவர் பேரா.சிங்காரவடிவேலு ஐயா அவர்களின் பெரு முயற்சியால் தமிழில் அறிவியல் கருத்தரங்கம் சாத்தியமாயிற்று, மேலும் சிறப்பூட்டும் விதமாக கவிப்பேரரசு வைரமுத்து அவர்களால் எழுதப்பெற்ற TNOA கீதம் இந்நிகழ்வில் அரங்கேறவுள்ளது.

இப்படி பல சிறப்புகளை கொண்ட நிகழ்வு பேரா.குலாம் மொகிதீன் ஐயா தலைமையின் கீழ் – தஞ்சை ஆர்த்தோ கிளப் உறுப்பினர்களால் நடத்தப்படவுள்ளது, அவர்களுக்கு என் வணக்கங்கள் வாழ்த்துகள்.

இந்த இனிய சரித்திர நிகழ்வில் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு வெற்றி பெறச் செய்வதின் மூலம் எதிர்வரும் காலங்களில் இது போன்ற தமிழ் அறிவியல் கருத்தரங்குகள் செவ்வனே தொடர வேண்டும் என பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

வாழ்க TNOA

வளர்க தமிழ்

அன்புடன்
சி.செ.இரவி
செயலர்
SECRETARY, TNOA

வணக்கம்,

தமிழில் நம் அறிவியல் கருத்தரங்கை நடத்த எண்ணிய இந்த சிந்தனைக்கு சொந்தக்காரர் நம் சங்கத்தலைவர் பேராசிரியர் சிங்காரவடிவேலு ஐயா அவர்கள். அவர்களுடைய சிந்தனைக்கு செயல்வடிவம் அளிக்க எனக்கும் எங்கள் தஞ்சாவூர் எலும்பு மருத்துவ மன்றத்திற்கும் ஒரு வாய்ப்பு கொடுத்த அவருக்கு என் உளமார்ந்த நன்றி.

தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.... நம் செயலாளர் மருத்துவர் ரவி என்ற செயல்வீரர் இருப்பது நான் இந்த பணியை தயக்கமில்லாமல் ஏற்றுக்கொள்ள முக்கிய காரணம்.

தாய்மொழி வழி கல்வி தான் உலகத்திலேயே சிறந்தது என்று அனைத்து ஆய்வுகளும் பறைசாற்றுகின்றன.

உலகின் பல நாடுகளில் பேசப்படும் ஒரே இந்திய மொழி தமிழ் தான். தமிழ் இந்தியாவின் சர்வதேச மொழி. இந்த பெருமை கொண்ட நாம், அனைத்து துறை கல்வியையும் தமிழ் வழி கற்று தம் தமிழை வாழ வைப்போம். நெஞ்சம் நிமிர்வோம். ஆங்கிலப்புலமையில் நாம் என்றும் யாருக்கும் இளைத்தவர்கள் அல்ல என்பது உலகறிந்ததே.

இந்த கருத்தரங்கில் அறிவியல் உரைகள் நிகழ்த்த ஒப்புக்கொண்டவர்களுக்கும் அறிவியலை தமிழ் வழி கேட்க வந்த அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி. இந்த விழாவின் நிறைவு அனைத்தும் இதற்காக பாடுபட்டவர்களைச் சாரும்.


குறைகள் ஏதேனும் இருப்பின் அது என்னையே சாரும்.

வாழ்க தமிழ்
வளர்க நம் தமிழ்நாடு எலும்பு மருத்துவ சங்கத்தின் பணி

மு. குலாம் மொகிதீன்
ஒருங்கிணைப்பாளர்
CONVENER - ORTHO TAMIL CONFERENCE - 2023

"தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்"

## கருத்தரங்க அமைப்புக்குழு


மரு.வை.சிங்காரவடிவேலு
தலைவர்


மரு.சி.செ.ரவி
செயலாளர்


மரு.குலாம் மொகிதீன்
ஒருங்கிணைப்பாளர்


மரு.தனகோபால்
பொருளாளர்

## தஞ்சை எலும்பு மருத்துவ மன்றம்


மரு.எஸ்.குமரவேல்
தலைவர்


மரு.லியோ ஜோசப்
செயலாளர்


மரு.தனகோபால்
பொருளாளர்

## இணைய வழி பதிவிற்கு

https://forms.gle/zWGS5c1eHsCeu3he6

## இணைய வழி கட்டணம் செலுத்த

UPI ID : thanjaiorthoclub@indianbk
Account Name : THANJAI ORTHO CLUB

**இணையவழி பதிவிற்கு (For Online Transaction) :**

| | | |
|---|---|---|
| கணக்குப்பெயர் / Account Name | : | THANJAI ORTHO CLUB |
| கணக்கு எண் / Account Number | : | 7608349190 |
| வங்கி பெயர் / Bank Name | : | INDIAN BANK |
| வங்கி கிளை / Branch of the bank | : | RAHMAN NAGAR |
| வங்கி எண் / IFSC Code | : | IDIB000R095 |

## தொடர்பு கொள்க :

| | | | | |
|---|---|---|---|---|
| பதிவிற்கு | : | திரு.பாபு | – | 97895 47811 |
| தங்கும் விடுதிக்கு | : | திருமதி.சித்ரா | – | 93451 02233 |
| மேலும் விவரங்களுக்கு | : | மரு.மிதுன் சக்ரவர்த்தி | – | 90806 32743 |

## இணைய வழி பதிவு & கட்டணம் செலுத்த :

- பதிவிற்கு – Google Form க்குள் செல்ல QR Code –ஐ Scan செய்க அல்லது Link–ஐ Click செய்க.
- கட்டணம் செலுத்த – வங்கி QR Code –ஐ G Pay (அ) வேறு UPI செயலி மூலம் Scan செய்க.
- கட்டணம் செலுத்தியவுடன் அதன் Screenshot –ஐ திரு.பாபு Whatsapp எண் 97895 47811 க்கு அனுப்புக.
- **மின்னஞ்சல் : orthotamil@gmail.com**

## கருத்தரங்க செயலகம் :

**ஸ்ரீ நாடி மருத்துவமனை, 121 & 122, மயில்பாளையம் சாலை, நாடியம்பாள்புரம், பட்டுக்கோட்டை - 614 602, தமிழ்நாடு.**